பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**19 12 2025 FRIDAY 7.15 PM**

ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1. ஆயுஷ் ஒருங்கிணைந்த சேவைக்கான இணையதளத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைத்தார்.

2. இந்தியா வந்துள்ள நெதர்லாந்து அமைச்சர் திரு David Van-னுடன், இருதரப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் இன்று பேச்சு நடத்தினார்.

3. தில்லி மற்றும் புறநகர் பகுதிகளில் காற்று மாசை கட்டுப்படுத்த ஒரு வாரத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

4. தெலங்கானாவில் 41 நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

5. 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

ஆயுஷ் ஒருங்கிணைந்த சேவைக்கான இணையதளத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைத்தார்.

புதுதில்லியில் நடைபெற்ற உலக சுகாதார அமைப்பின் பாரம்பரிய மருத்துவம் தொடர்பான சர்வதேச உச்சிமாநாட்டின் நிறைவு விழாவில் பங்கேற்ற அவர் இதனை தொடங்கிவைத்தார்.

ஆயுஷ் பொருட்கள் மற்றும் சேவைக்கான சர்வதேச தரக்குறியீட்டையும் பிரதமர் இந்த நிகழ்ச்சியில் வெளியிட்டார்.

<<<<<<>>>>>>

நெதர்லாந்து வெளியுறவு அமைச்சர் திரு **David Van Weel**-ஐ வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று சந்தித்து பேசினார்.

இதுதொடர்பாக திரு ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், வர்த்தகம், பாதுகாப்பு, நீர் மேலாண்மை, விவசாயம், சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

செமி கண்டெக்டர், திறன் மிக்க ஊழியர்களை பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளுதல், உள்ளிட்டவை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டதாக திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

தில்லி மற்றும் புறநகர் பகுதிகளில் காற்று மாசை கட்டுப்படுத்த ஒருவாரத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாறுபாட்டிற்கான அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இதுதொடர்பான உயர்மட்ட ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட அவர், தில்லி, ஹரியானா, உத்தரப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் காற்றின் தரம் பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்தார்.

காற்றின் தரத்திற்கும், சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுத்துவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

சாலையோரங்களில் உள்ள குப்பைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சுற்றுச்சூழலுக்கு இடையூறு செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு புபேந்தர் யாதவ் எச்சரித்தார்.

<<<<<<>>>>>>

வடகிழக்கு மாநிலங்களில் கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் உற்பத்திக்கு உத்வேகம் அளிக்கும் நோக்கில் உயர்மட்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்குழு கூட்டத்தில் கலந்துகொண்ட வடகிழக்கு மாநிலங்களுக்கான மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா, கைவினைப் பொருட்கள் உற்பத்தித்துறையில் திறனை மேம்படுத்துவது, தரம் உயர்த்துவது, தரச்சான்றிதழ் வழங்குவது உள்ளிட்டவற்றுக்கு முக்கிய கவனம் செலுத்தப்படுவதாக தெரிவித்தார்.

இந்த மாநிலங்களில் மின்னணு வர்த்தகத்தை மேம்படுத்துவது குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக கூறினார்.

<<<<<<>>>>>>

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு ஜி ஆர் சுவாமிநாதனுக்கு எதிராக திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள்

கொண்டுவந்த பதவி நீக்க தீர்மானம் சட்ட ரீதியான ஆய்வுக்கு பின்னரே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசியல் சாசன பிரிவு 217-ன்கீழ் இந்த தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த தீர்மானம் ஏற்கப்படும் பட்சத்தில் மூன்று நீதிபதிகள் கொண்ட குழு ஆய்வு செய்து நாடாளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கும் என்றும் அவர் கூறினார்.

அந்த அறிக்கையின் அடிப்படையிலேயே நாடாளுமன்றம் மேல் நடவடிக்கை எடுக்கும் என்றும் திரு ஓம். பிர்லா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கு பின்னர் வரைவு வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் சென்னையில் இப்பட்டியலை வெளியிட்டு செய்தியாளர்களிடம் பேசினார்.

வாக்காளர் திருத்தப்பணிகளுக்கு பின்னர் ஐந்து கோடியே 43 லட்சத்து 76 ஆயிரத்து 755 வாக்காளர்கள் உள்ளதாக அவர் கூறினார்.

97 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்களின் பெயர் நீக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அதிகபட்சமாக சோழிங்கநல்லூர் தொகுதியில்தான் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்களின் பெயர் நீக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இறந்தவர்கள், நிரந்தரமாக இடம்பெயர்ந்தவர்கள், பல தொகுதிகளில் பெயர் இடம்பெற்றது போன்ற காரணங்களுக்காக வாக்காளர்கள் பெயர் நீக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க இன்று முதல் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்காக சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

தகுதியுள்ள வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படாமாட்டாது என்றும் திருமதி அர்ச்சனா பட்நாயக் கூறினார்.

<<<<<<>>>>>>

அனைத்து மக்களுக்கும் சமமான வாய்ப்பை அளிக்கவும், சமத்துவம் மிக்க சமுதாயத்தை உருவாக்கவும் அரசு பணிகளுக்கான தேர்வாணையங்கள் பாடுபட வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

ஹைதராபாதில் இன்று நடைபெற்ற மாநில அரசு பணியாளர்கள் தேர்வாணையத் தலைவர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், மத்திய அரசுப்பணிகள் தேர்வாணையமும், அரசு பணியாளர்கள் தேர்வாணையமும் நேர்மையான முறையில் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

நாட்டின் அரசியல் சாசனத்தை வடிவமைத்தவர்கள், அரசுப் பணிகள் நியமனத்தில் நேர்மையை கடைபிடிக்க வேண்டும் என்ற உறுதிபாட்டை தனியார் நிறுவனங்களும் கடைபிடிக்க வேண்டும் என வலியுறுத்தி வருவதாக அவர் கூறினார்.

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டுவதற்கு திறன் மிக்க அரசு நிர்வாகம் தேவை என்றும், திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தெலங்கானாவில் 41 நக்சலைட்டுகள் இன்று சரணடைந்துள்ளனர்.

இவர்களில் ஆறு பேர் தேடப்பட்டு வரும் முக்கிய தீவிரவாதிகள் ஆவர்.

இத்தகவலை தெரிவித்த ஹைதராபாத் தலைமை காவல் இயக்குனர் , மூன்று ஏகே-47 ரக துப்பாக்கிகளும், ஐந்து எஸ் எல் ஆர் துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களையும் இவர்கள் ஒப்படைத்ததாக கூறினார்.

இவர்கள் அனைவரும் தீவிரவாதத்தை கைவிட்டு, இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதற்கான உறுதிமொழி ஏற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசு பணியாளர் துறையின் சார்பில் இன்று முதல் சிறந்த அரசு நிர்வாக வாரம் கடைபிடிக்கப்படுகிறது.

புதுதில்லியில் தேசிய அளவிலான இந்த விழிப்புணர்வு வார இயக்கத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டு பேசிய இத்துறையின் செயலாளர் **Rachna Sha,** அரசு திட்டங்களின் பயன்கள் அனைத்துத் தரப்பினருக்கும் சென்றடைவதை உறுதி செய்வதே சிறந்த அரசு நிர்வாகம் என்று குறிப்பிட்டார்.

இதன் ஒருபகுதியாக, பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு, **2** லட்சத்து **11** ஆயிரத்திற்கும் மேற்பட்டவற்றிற்கு தீர்வுகாணப்பட்டுள்ளது.

இந்த இயக்கத்தின் அடுத்தக்கட்டமாக மாவட்ட ஆட்சியர்கள், தாலுக்கா மற்றும் பஞ்சாயத்து அளவில் முகாம்களை நடத்தி, மக்களின் குறைகளுக்கு தீர்வு

காண்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 25-ஆம் தேதிவரை தேசிய அளவில் சிறந்த அரசு நிர்வாக வார இயக்கம் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

ரயில்களில் முன்பதிவில்லா பயணச்சீட்டுகளை ஆன்லைன் மூலமாகவோ, செல்போன் செயலி மூலமாகவோ பதிவு செய்பவர்கள் செல் போனிலேயே அந்த விவரங்களை டிக்கெட் பரிசோதனையின்போது தெரிவிக்கலாம் என்று ரயில்வே நிர்வாகம் தெளிவுபடுத்தியுள்ளது.

சில ஊடகங்களில் முன்பதிவில்லா டிக்கெட் பதிவு குறித்து அச்சு நகல்களை கொண்டுவர வேண்டும் என வெளியான தகவல்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் ரயில்வே நிர்வாகம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

அமுல்யா போர் கப்பல் இன்று நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கப்பட்டது.

கோவாவில் உள்ள கடற்படை தளத்தில், உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்த கப்பல், பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

பாதுகாப்புத்துறையில் சுயசார்பு என்ற நிலையை நிரூபிக்கும் வகையில் இந்த அமுல்யா நவீன ரக போர் கப்பல் அமைந்துள்ளது.

51 மீட்டர் நீளம் கொண்ட இந்த போர் கப்பலில் 60 சதவீத பாகங்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவை.

மூவாயிரம் கிலோவாட் திறன் கொண்ட இரண்டு டீசல் என்ஜின்களை கொண்டு இந்த கப்பல் இயக்கப்படுகிறது.

<<<<<<>>>>>>

இந்தியா — மலேசியா இடையேயான கூட்டு ராணுவ பயிற்சி ராஜஸ்தானில் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.

இரண்டு வாரங்களாக நடைபெற்ற இந்த பயிற்சியில் இந்திய ராணுவத்தை சேர்ந்த 120 வீரர்கள் இடம்பெற்றிருந்தனர்.

தீவிரவாத நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கான ஆலோசனைகளும் இந்த ராணுவ பயிற்சியின்போது அளிக்கப்பட்டது.

அச்சமின்றி போரில் ஈடுபடுவதற்கான வழிமுறைகளும் இந்த பயிற்சியின்போது வீரர்களுக்கு கற்றுத்தரப்பட்டது.

<<<<<<>>>>>>

யுக்ரைனை நோக்கி ரஷ்ய படைகள் முன்னேறி வருவதாக அந்நாட்டு அதிபர் திரு விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

இன்று மாஸ்கோவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திட்டமிட்ட அணுகுமுறையின் பயனாக ரஷ்ய படையினர் யுக்ரைன் பகுதிக்குள் நுழைய முடிந்ததாக தெரிவித்தார்.

ரஷ்ய ராணுவத்திடம் திறன் மிக்க போர் ஆயுதங்கள் உள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

துபாயில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டம் மழை பாதிப்பு காரணமாக 20 ஓவராக குறைக்கப்பட்டது.

இதில், டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதையடுத்து பேட் செய்த இலங்கை நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 138 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக Chamika Heenatigala 42 ரன் எடுத்தார்.

Henil Patel மற்றும் Khilan Patel தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின்னர் பேட் செய்த இந்தியா 18 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 139 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

**<<<<<<END>>>>>>**